**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

**8th டிசம்பர் / December 2024 ஞா யிறு ஆராதனை**

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. மேனகா ஆண்டன்**<br>Mrs. Menaka Anton |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. மேனகா ஆண்டன்**<br>Mrs. Menaka Anton |

## இரண்டாம் ஞாயிறு:Lighting of Advent 2nd Candle
## சமாதானத்திற்கான ஆயத்தம்
## *Preparation for Peace*

***ஏசாயா 40:3-5***
***3. கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வை பண்ணுங்கள் என்றும், 4.பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகலமலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவைச் சமமாக்கப்படும் என்றும்,***
***5. கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமானயாவும் அதை ஏகமாய்க் காணும், கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று.***

| | |
|---|---|
| **இரண்டு ஊதா நிற மெழுகுவர்த்தியை கொழுத்தவும்**<br>***(Light up two purple candles):*** | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| **அந்நேரத்தில் சொல்ல வேண்டியது:** | **திருமதி. மேனகா ஆண்டன்**<br>Mrs. Menaka Anton |

**இன்றைக்கு நம்பிக்கை மற்றும் சமாதானத்தின் மெழுகுவர்த்திகளை கொழுத்துகிறோம். சமாதானத்தின் தேவன் வருகிறார் என்பதனை இது நினைவுப்படுத்தட்டும்.**

**ஜெபம்: ஆண்டவரே சமாதானமற்ற இந்த உலகத்தில் உம்முடைய வருகை மட்டுமே சமாதானத்தை கொண்டுவர முடியம் என்று விசுவாசிக்கிறோம். உம்முடைய வருகைக்கு வழியை ஆயத்தப்படுத்துகிறவர்களாக எங்களையும் பயன்படுத்தும். சமாதானப் பிரபுவாகிய இயேசுவின் இணையற்ற நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் வல்ல பிதாவே. ஆமேன்.**

| | |
|---|---|
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்**

*1. ராக்காலம் பெத்லேம்*
*மேய்ப்பர்கள்*
*தம் மந்தை காத்தனர்;*
*கர்த்தாவின் தூதன் இறங்க,*
*நற்செய்தி கூறுவேன்.*

*2. அவர்கள் அச்சங்கொள்ளவும்*
*விண் தூதன் திகில் ஏன்?*
*எல்லாருக்கும் சந்தோஷமாம்*
*விண் ஜோதி கண்டனர்.*

*3. 'தாவீதின் வம்சம் ஊரிலும்,*
*மெய் கிறிஸ்து நாதனார்*
*பூலோகத்தார்க்கு ரட்சகர்*
*இன்றைக்குப் பிறந்தார்.'*

*4. 'இதுங்கள் அடையாளமாம்,*
*முன்னணைமீது நீர்*
*கந்தைபொதிந்த கோலமாய்*
*அப்பாலனைக் காண்பீர்.'*

| | |
|---|---|
| ✝ **மாறி மாறி வாசித்தல் 49ம் ஞாயிறு** “சங்கீதம் 145” “கர்த்தர் பெரியவர்”<br>Psalter Reading “Psalm 145” | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord’s Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**பிறந்தார், பிறந்தார்**

**பிறந்தார், பிறந்தார்.**
**வானவர் புவிமானிடர் புகழ்**
**பாடிட பிறந்தார்**

*1. மாட்டுத் தொழுவம்*
*தெரிந்தெடுத்தார்*
*மாதேவ தேவனே*

*மேன்மை வெறுத்தார் தாழ்மை தரித்தார்*
*மா தியாகியாய் வளர்ந்தார்*

*2. பாவ உலக மானிடர் மேல் பாசம் அடைந்தவரே*
*மனக்காரிருளை எம்மில் நீக்கிடும் மெய்*
*மாஜோதியாய் திகழ்ந்தார்*

*3. பொறுமை தாழ்மை அன்புருக்கம்*
*பெருந்தன்மை உள்ளவரே*
*மரணம் வரையும் தன்னைத் தாழ்த்தினதால்*
*மேலான நாமம் பெற்றார்*

*4. கந்தைத் துணியோ கர்த்தருக்கு*
*கடும் ஏழ்மை கோலமதோ*
*விலையேறப் பெற்ற உடை அலங்கரிப்பும்*
*வீண் ஆசையும் நமக்கேன்*

*5. குருவைத் தொடரும் சீஷர்களும்*
*குருபோல மாறிடுவார்*
*அவர் நாமம் தரித்தவர் யாவருமே*
*அவர் பாதையில் நடப்போம்*

*6. இயேசு பிறந்தார் உள்ளமதில்*
*இதை எங்கும் சாற்றிடுவோம்*
*புசிப்பும் குடிப்பும் தேவ ராஜ்யமல்ல*
*பரன் ஆவியில் மகிழ்வோம்*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***திரு. சதீஷ் ஆபிரகாம்***
***லூக்கா 3 : 1 - 15***
Scripture Reading — Mr. Sathish Abraham
luke 3 : 1 - 15

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

<u>*இயேசு மானிடனாய்ப் பிறந்தார்*</u>

***இயேசு மானிடனாய்ப் பிறந்தார்***
***இந்த லோகத்தை மீட்டிடவே***
***இறைவன் ஒளியாய் இருளில் உதித்தார்***
***இந்த நற்செய்தி சாற்றிடுவோம்.***

*1. மேய்ப்பர்கள் இராவினிலே - தங்கள்*
*மந்தையைக் காத்திருக்க*
*தூதர்கள் வானத்திலே - தோன்றி*
*தேவனைத் துதித்தனரே.*

*2. ஆலோசனை கர்த்தரே - இவர்*
*அற்புதமானவரே*
*விண் சமாதானப்பிரபு - சர்வ*
*வல்லவர் பிறந்தனரே*

*3. மாட்டுத்தொழுவமதில் - பரன்*
*முன்னணையில் பிறந்தார்*
*தாழ்மையைப் பின்பற்றுவோம் - அவர்*
*ஏழ்மையின் பாதையிலே*

*4. பொன், பொருள், தூபவர்க்கம் வெள்ளைப்*
*போளமும் காணிக்கையே*
*சாட்சியாய் கொண்டு சென்றே -வான*
*சாஸ்தரிகள் பணிந்தனரே*

*5. அன்னாளும் ஆலயத்தில் - அன்று*
*ஆண்டவரை அறிந்தே*
*தீர்க்க தரிசனமே - கூறி*
*தூயனைப் புகழ்ந்தனளே*

*6. யாக்கோபில் ஓர் நட்சத்திரம் - இவர்*
*வாக்கு மாறதவரே*
*கண்ணிமை நேரத்திலே-நம்மை*
*விண்ணதில் சேர்த்திடுவார்.*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***லூக்கா 3 : 11***
Luke 3 : 11

***11. அவர்களுக்கு அவன் பிரதியுத்தரமாக: இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன் என்றான்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **⁄ Indicates Congregation standing**